உ

செட்டிநாடு

திங்கள் இருமுறை

சமய வளர்ச்சி, மொழியாக்கம் கருதி உழைப்பது.

மலர்-26] துன்முகி- தை-25 7-2-57 [இதழ்-8

ஆசிரியர்:- பாலகவி இராமநாதன் செட்டியார்



ஒப்பருந் துறைசைச், சுப்பிர மணிய,
அற்புத குரவன், நற்பதந் துணையே.



நெய்தல்

வினைவயிற் பிரிந்த தலைவன் மீண்டு சிறைப்புறமாக வந்திருத்தலை யறிந்த தோழி தலைவியை நோக்கி அவன் இப்பொழுதே வந்துவிடுவானென வலியுறுத்திக் கூறத் தலைவனிடம் தனக்குள்ள வெறுப்பின்மையைத் தலைவி அவளுக்குக் கூறியது.

செந்நெ லரிநர் கூர்வாட் புண்ணுறக்
காணார் முதலொடு போந்தெனப் பூவே
படையொடுங் கதிரொடு மயங்கிய படுக்கைத்
தன்னுறு விழும மறியா மென்மறத்
தெறுகதி ரின்றுயிற் பசுவாய் திறக்கும்
பேதை நெய்தற் பெருநீர்ச் சேர்ப்பற்
கியானினைந் திரங்கே னாக நோயிகந்
தறனி லாளன் புகழவெற்
பெறினும் வல்லேன்மற் றோழி யானே 275

:-அம்மூவனார்

தோழீ! செந்நெற் கதிரை யறுக்கும் மள்ளர் தமது கூரிய அரிவாளால் புண்படக் காணாராய்க் கதிர்த் தாற்றோடும் போந்ததனால் அம்மலர் அரிவாளோடும் கதிரோடும் கலந்த அரிக்கிடையில் படுக்கையாகக் கிடந்து தானுற்ற துன்பத்தை நினையாமல் சுடுகின்ற கதிரவனைக் கண்டாலும் இனிய துயிலிற் பசிய வாயைத் திறக்கின்ற பேதைமையையுடைய நெய்தல் மிக்க பெரிய கடற்கரைத் தலைவனுக்காக நான் படுகின்ற துன்பத்தை நினைந்து இரங்கேனாகலின் அவனை வெறுத்தேனல்லேன். அந்த அறனிலாளன் பிறர் புகழும்படி என்னை மீட்டும் பெறுவதாயினும் அதற்கும் இயைவேன்.



திருவாவடுதுறை ஆதீனத்துப் பிரதம பரமாசாரியர் ஸ்ரீ பஞ்சாக்கர தேசிகமூர்த்திகள் மகரத் தலைநாட் திருபூசை விழாவில் (துன்முகி ஆண்டு) பேசியது.

செல்வி வயிநாகரம்
இராம. மீனாட்சி.

திருக்கயிலாய பரம்பரையும், திருமூலதேவ நாயனாரும்.

சிவநெறிச் செல்வர்களே! செல்விகளே! வணக்கம்.

ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்களின் திருவடிகளைச் சிரமேற் சூடி அடியேன் இப்பொழுது "திருக்கயிலாய பாம்பரையும், திருமூலதேவ நாயனாரும்" என்பது பற்றிச் சில சொற்கள் சொல்ல எழுந்து நிற்கின்றேன். ஞான குரவரின் சந்நிதியில், சடப்பொருள்களும் கூடச்செயற்கருஞ் செயல்களைச் செய்யும் ஆற்றல் பெறுவது உண்மையாயிருக்கும்பொழுது அடியேன் எவ்வளவு உயர்ந்தபொருளையும்இங்கேஎளிமையிற் பேசிவிட முடியுமென்று துணிவு கொண்டதிற்பிழையொன்றும்இல்லையல்லவா?

நமது சித்தாந்த சைவ ஆதீனங்கள் எல்லாம், திருக்கயிலாய மலையிலுள்ள சீகண்டபரமசிவத்தைத் தலைமைக் குரவராகக் கொண்டு அவரது பாம்பரையில் தோன்றியவை. சீகண்ட முதல்வரிடம் அருளுபதேசம் பெற்ற மாணாக்கர் நந்தியம்பெருமான். அவரிடம் ஞானோபதேசம் பெற்றவர் எண்மரென்று திருமந்திரம் கூறுகின்றது. அவ்வெண்மருள் ஒருவரே திருமூலதேவ நாயனாரென்றும் அத் திருமந்திரத்தால் அறிகிறோம்.

நூல்களை முதல் நூல், வழிநூல் சார்புநூல் என மூன்று வகைப்படுத்தி ஆன்றோர் கூறுவர். இவற்றுள் முதல் நூலென்பது வேதசிவாகமங்கள். 'வினையின் நீங்கி விளங்கிய அறிவின், முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்' என்ற இலக்கணச் சூத்திரப்படி வேத சிவாகமங்களே வினையின் நீங்கி விளங்கிய அறிவினனாகிய இறைவனால் திருவாய் மலர்ந்தருளப் பெற்றவை. இதனை 'வேதநூல் சைவநூல் என்றிரண்டே நூல்கள், வேறுரைக்கும் நூலிவற்றின் விரிந்த நூல்கள்' என்று சிவஞானசித்தியாரும் அறிவிக்கின்றது.

வேதத்தைப் பொதுநூலென்றும், சிவாகமத்தைச் சிறப்பு நூலென்றும் பெரியோர் கூறுவர். 'வேதமோ டாகம மெய்யா மிறைவனூல், ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுள்ளன' என்பது திருமந்திரம். வேதம் உலகியலை விளக்கமாக-இறையியலைக் குறிப்பாகவும், சிவாகமம், உலகியலைக் குறிப்பாக-இறையியலை விளக்கமாகவும் உரைப்பதால் 'வேதத்தை விட்ட அறமில்லை' என்றும், 'அண்ணல் அருளால் அருளுஞ் சிவாகமம், எண்ணில் இருபத்தெண் கோடி நூறாயிரர் விண்ணவர் ஈசன் விழுப்பம் உரைத்தனர்' என்றும் திருமந்திரம் கூறியது.

சிறப்பு நூலாகிய சிவாகமம் காமிகம் முதல்வாதுளமீறாக வுள்ள இருபத்தெட்டு ஆகும். 'அஞ்சோ டிருபத்து மூன்றுள ஆகமம்' என்பது திருமந்திரம். இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும், சதாசிவமூர்த்தி தமது தற்புருட முதலிய நான்கு முகங்களிலிருந்தும் வெளிப்படுத்திச் சனகாதி முனிவர் நால்வருக்கும் அவற்றின்பொருளை அறிவுறுத்தினாரென்பதை, "எரிசையும் வடவாலின் கீழிருந்தங் கிருவர்க் கிரங்கி நின்று, நேரியநான்மறைப்பொருளை யுரைத்தொளிசேர் நெறியளித்தோன்' என்ற திருஞானசம்பந்தப் பெருந்தகையாரது திருவாக்கினால் அறிகிறோம்.

சிவாகமங்கள் சதாசிவமூர்த்தியின் ஈசான முகத்திலிருந்து வெளிப்பட்டன. இது 'அஞ்சா முகத்தில் அரும்பொருள் கேட்டதே' என்ற திருமந்திரத்தால் அறியப்பெறுகின்றது. சிவாகமங்கள் இருபத்தெட்டனுள் நந்தியம்பெருமான் பெற்றவை ஒன்

பது. அவை காரணம், காமிகம், வீரம், சிந்தம், வாதுளம், வியாமளம், காலோத்தரம், சுப்பிரம், மகுடம் என்பனவாம். 'நவஆகம மேங்கள் நந்திபெற்றனே' என்பது திருமூலர் திருவாக்கு.

சீகண்ட மூர்த்தியிடம் உபதேசம் பெற்ற நந்தியம்பெருமானுக்கு நன்மாணவராய் இருந்தவர் எண்மர். அவர் சனகர், சனற்குமாரர், சனந்தனர், சனாதனர், சிவயோகமாமுனி, பதஞ்சலி, வியாக்கிரபாதர், திருமூலர் என்பவராவர். இவரை 'நந்தியருள்பெற்ற நாதரை நாடிடில், நந்திகள் நால்வர் சிவயோக மாமுனி, மன்று தொழுத பதஞ்சலி. வியாக்கிரமர், என்றிவரென்னோடெண்மரு மாமே' என்று திருமூலரே குறிப்பிடுகின்றார். மகா பாஷியஞ் செய்தவரும் யோகசூத்திரம் செய்தவருமென வேறு இரண்டு பதஞ்சலிகள் உள்ளார்களாதலின், அவர்களின் வேறான 'மன்று தொழுத பதஞ்சலி'யே திருமூலதேவரின் சகபாடியென்பது உணரத்தக்கதாகும்.

மேற்கூறிய சனகர் முதல் திருமூலர் வரையுள்ள எண்மராலும் உலகத்திற் சித்தாந்த சைவஞானம் பரவி நிலைபெறுதற் பொருட்டுப் பத்தொன்பது சந்தானங்கள் ஏற்பட்டன. சனகரின் பரம்பரையில் சம்பு, மலையமான் சந்தானங்களும், சனற்குமாரர் பரம்பரையில் விஞ்ஞான தேவர், மெய்கண்டதேவர் சந்தானங்களும், சனந்தனர் பரம்பரையில் சிவமண்ணிய தேவர், பரமதேவர், சிவானந்தபோதர் சந்தானங்களும் சனாதனர் பரம்பரையில் பிரமதேவர், சிங்கநாததேவர் சந்தானங்களும் சிவயோக முனிவர் பரம்பரையில் வாமதேவ முனிவர் சந்தானமும், பதஞ்சலிமுனிவர் பரம்பரையில் நிறைந்த நாயனார் சந்தானமும், வியாக்கிரபாதமுனிவர் பரம்பரையில் சத்தியோசாத தேவர் சந்தானமும்-திருமூலதேவர் பரம்பரையில் பிரமதேவர், இந்திரதேவர், விஷ்ணுதேவர், உருத்திரதேவர், கந்துருமகா விருடிகள், காலாக்கினியுருத்திரர் கஞ்சனூர் மலையமான் சந்தானங்களும் உண்டாயின.

திருமூலதேவரிடம் உபதேசம் பெற்ற எழுவரையும் 'மந்திரம் பெற்ற வழிமுறை மாலாங்கன், இந்திரன் பிரமன் சோமன் உருத்

திரன் கந்துருக்காலாங்கி கஞ்சமலையனோ, டிந்த வெழுவரு மென்வழி யாமே' என்ற திருமந்திரச் செய்யுள் அறிவிக்கின்றது. நந்திஅருளாலே நாதனும் பேர் பெற்ற திருமூலநாயனுர், நந்தியருளாலே மூலனை நாடியதாகவும் அந்திமதிபுனை அரனடி நாடொறும் சிந்தை செய்து ஆகமம் செப்பியதாகவும் கூறுகின்ருர்.

"சேர்ந்திருந்தேன் சிவமங்கைதன் பங்கனைச், சேர்ந்திருந்தேன் சிவனுவடுதண்டுறை, சேர்ந்திருந்தேன் சிவபோதியி னீழலிற், சேர்ந்திருந்தேன் சிவனுமங்கள் ஓதியே" எனவும், "தப்பில்லா மன்றில் தனிக்கூத்துக் கண்டபின், ஒப்பில்எழுகோடி யுகம் இருந்தேனே" எனவும், "என்னை நன்ருக இறைவன் படைத்தனன், தன்னை நன்ருகத் தமிழ் செய்யுமாறே" எனவும் இவர்கூறுவதுகொண்டு திருவாவடுதுறைச் சிவபோதியினடியில் பல ஆண்டுகள் வாழ்ந்திருந்து ஆண்டவனது கட்டளைப்படி தமிழ்த் திருமந்திரத்தை ஆக்கியருளினுரென்பதை அறியலாம்.

சைவத் திருமுறைகள் பன்னிரண்டிலும், காலத்தால் முற்பட்டது, தமிழாகமமாகிய திருமந்திரமாகும். மெய்கண்டதேவர் தமிழிற் சிவஞானபோதப் பெருநூலை அருளிச்செய்வதற்கு முன்னர் பதி, பசு, பாச உண்மை இலக்கணங்களையும் சாதனம் பயன் ஆதியவற்றையும் தமிழில்புலப்படுத்திக் கொண்டிருந்த நூல் திருமந்திரமேயாகும்.

தெய்வப் புலமைச் சேக்கிழார்பெருமான் திருமூலநாயனுரை 'நான்மறை யோகிகள் ஒருவர், அணிமாதி சித்தி பெற்றுடையார், என்பனவாதிய சிறப்பு மொழிகளாற் குறித்துப் பொது நூலாகிய வேதத்தில் அவருக்குள்ள பயிற்சியையும், அதனுல் அவர்பெற்ற அணிமாதி அட்டமாசித்திப் பேற்றையும் விளக்கியருளினுர். பின்னர் 'நந்தி திருவருள்பெற்றவர், சைவநெறி மெய்யுணர்ந்தோர், தவமுனிவர் என்பன வாதிய சிறப்பு மொழிகளாற் பாராட்டி, அவரது ஞானுபதேச பரம்பரை நலத்தையும், சாதன சாத்தியச் சித்தியையும் புலப்படுத்தியமை நினைவிலிருத்தத் தக்கதாகும்.

சிவாகமங்கள் சரியாபாதம், கிரியாபாதம், யோகபாதம், ஞான பாதம் என்னும் நான்கு பிரிவுகளை உடையன. இந்நான்கு பொருளையுந்தான் திருமந்திரமும் விளக்கிக்கொண்டிருக்கிற தென்பதை 'ஊனுடம்பிற் பிறவி விடந் தீர்ந் துலகத் தோருய்ய ஞானமுதல் நான்குமலர் நற்றிரு மந்திரமாலை' என்ற சேக்கிழார் பெருமான் திருவாக்கு அறிவிக்கின்றது.

திருமூல தேவநாயனர், திருவாவடுதுறைச் சிவ போதியின் கீழ் மூவாயிரம் ஆண்டுகள் தவமிருந்து, ஒவ்வொரு ஆண்டுத் தவத்தின் பயனாக ஒவ்வொரு பாடல்வீதம் திருமந்திரமாலையை அருளிச் செய்தாரென்று வரலாறு கூறுகின்றது. இது தற்போதைய கால ஆராய்ச்சியாளர்களின் முடிபோடு பெரிதும்ஒத்து நிற்கின்றதென்பது நினைவிலிருத்த வேண்டியவொன்றாகும்.

பதஞ்சலி – வியாக்கிரமாதகிய இருவரும் திருமூலர் காலத்தவ ரென்பது அவரது திருவாக்கினுல் அறியப் பெற்றது. வியாக் கிரமருக்கு வசிட்ட முனிவரது தங்கையை மணஞ் செய்வித்த தும், அவருக்கு உபமந்யு மகாமுனிவர் பிறந்ததும், அவருக் காக ஞானமா நடராச மூர்த்தியார் தில்லையில் திருப்பாற்கடலை வரவழைத்ததும், கோயிற் புராண முதலியவற்றால் தெரி கின்ற செய்திகளாம்.

வசிட்ட முனிவர் தசரதருக்கும் இராமர் முதலியோருக்கும் குலகுருவாயிருந்தவராதலின் காலஆராய்ச்சியாளர்கள் கண்டு வெளியிட்டிருக்கிற முடிவுப்படி இராமாயண காலமாகிய கி. மு. ஆறாயிரமே திருமூலர் காலமென்பது தேற்றம். எனவே இற்றைக் குச் சற்றேறக்குறைய எண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் இங் கிருந்த திருமூலதேவர், இடையில் மூவாயிரம் ஆண்டுகள் திரு வாவடுதுறைச் சிவபோதியின் கீழ்த் தவமிருந்து திருமந்திர மாலையை ஓராண்டுக்கொன்றாகவழங்கியருளினாரென்பது மறுக்கமுடியாத உண்மையாய் வலுப்பெறுகின்றது. மூலனு டைய உடம்பில் புகுந்து பல்லாண்டுகள் அவர் இருந்தாரென் பதை 'இருந்தேன் இக்காயத்தே எண்ணிலி கோடி' என்று அவரே கூறுவதால் அறியலாம்.

திருமந்திர மாலையைச் செய்தபிறகு அதனைத் தமது மாணவருக்கு உபதேசித்து அவர்களைக்கொண்டு பல மடாலயங்களை நிறுவிச் சித்தாந்த சைவ நுண்பொருள்கள் நிலவுலகத்திற் பரவும்படி திருமூலதேவர் செய்தருளினர். கயிலை முதல் பொதியம் வரை பல இடங்களில், திருமூலதேவர்பெயரால் பல மடாலயங்கள் இருந்தனவென்று, தத்துவரத்தினாகரம்என்னும் நூல்கூறும்.

மெய்கண்ட சாத்திரம் பதினான்கனுள் சிவஞான போதத்திற்கு முந்திய திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும், திருமூலதேவரது ஞான பாம்பரையில் வந்த ஆசிரியர்களாலேயே இயற்றப்பெற்றனவென்பது திருமந்திரத்தோடு அவ்விரு நூல்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு நன்கு விளங்கும்.

இன்று தருமபுர ஆதீன நிர்வாகத்திலிருந்து வருகிற திருச்சிராப்பள்ளி மௌனமடம், திருமூலர் பரம்பரையில் வந்த மௌன சுவாமிகளால் நிறுவப் பெற்ற தென்பதும், அவரிடத்திலே தாயுமான சுவாமிகள் அருளுபதேசம் பெற்றார்களென்பதும் அறியத்தக்கன வாகும்.

திருமூலதேவரது சகபாடியாய்த் திருக்கயிலாய பரம்பரையில் நந்தியம்பெருமானிடத்து அருளுபதேசம் பெற்ற சனற்குமார முனிவரின் வழித்தோன்றலும், நிலவுலகத்துச் சந்தான முதற்குருவும் ஆகிய மெய்கண்ட தேவநாயனர் அருளியதும், நமது திருவாவடுதுறை ஆதீனத்து அநுபவ ஞானநூலுமான சிவஞானபோதச் சூத்திரக் கருத்துக்கள், திருமந்திரத்தில் மிளிர்ந்து கொண்டிருக்கின்றன.

'பதி பசு பாசம் எனப்பகர் மூன்றில், பதியினைப் போற்பசு பாச மனாதி, பதியினைச் சென்றணுகாப் பசு பாசம், பதியணு கிற்பசு பாச நிலாவே' என்பதில் பிரமாணஇயலும், 'தன்னை யறியத் தனக்கோரு கேடில்லை, தன்னை யறியாமல் தானே கெடுகின்றான், தன்னை யறியுமறிவை யறிந்தபின், தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே' என்பதில் இலக்கண இயலும், 'பொட்டடித் தேங்கும் பிதற்

றித் திரிவேனைப், போட்டடித்துள்ளமர் மாசெலாம் வாங்கிப் பின் தட்டோக்க மாறினன் தன்னையு மென்னையும், வட்டம தோத்து வாணிபம் வாய்த்ததே' என்பதில் சாதன இயலும் 'என்னை அறிந்திலேன் இத்தனை காலமும் என்னை அறிந்தபின் ஏதும் அறிந்திலேன், என்னையறிந் திட் டிருத்தலுங்கைவிடா, தென்னையிட்டென்னை உசாவுகின்றேனே' என்பதில் பயனியலும் அடங்கியிருப்பதைச் சான்றோர்களாகிய உங்கள் நினைவுக்குக்கொண்டுவருகிறேன்

ஞானகுரவர் பரம்பரையில் உடன் தோன்றியவரென்னும் உரிமையினாலும் தமது வாசஸ்தானமாகிய திருவாவடுதுறையில் தங்கியிருந்து தமிழாகமத்தை வெளிப்படுத்தினாரென்ற பெருமையினாலும் மேலும்இவைபோன்ற பல ஒற்றுமைகளினாலும் நமது மகா சந்நிதானம் அவர்கள் திருமூலதேவாது திருமந்திரமாநாட்டை ஆண்டுதோறும் இங்கே கூட்டி ஞான தானம் புரிந்தருளி வருகிறார்கள். அவர்களது திருவடிக்கமலங்களுக்கு உளமார்ந்த வணக்கங்களைச் செலுத்தி 'தேவர் குறளும் திருநான் மறைமுடிவும் மூவர் தமிழும் முனிமொழியும் —கோவை, திருவாசகமும் திருமூலர் சொல்லும், ஒருவா சகமென் றுணர்' என்ற ஔவையார்திருவாக்கைக் கூறி இம்மட்டில் அமைகின்றேன். நலம்பெருகுக.



நாகர்கோவில் சைவத் திருவாளர் சி. வள்ளிநாயகம்பிள்ளை அவர்கள் செல்வி, இராமலெட்சுமிக்கும், தோவாளை திரு. இராம. இராமநாத பிள்ளை அவர்கள் செல்வன் திருநாவுக்கரசு பி. ஏ. க்கும் 4-2-57ல் சிறப்பாகத் திருமணம் நடைபெற்றது. மணமக்கள் மக்களோடு மகிழ்ந்து மனையறம் காத்து நெடிது வாழ ஆண்டவனை வேண்டுகின்றோம்.

படித்தோம்!

ஒருவாசகம்:- திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து துன்முகி மகர சங்கராந்தி இலவசவெளியீடு. திருக்குறளிலும் திருவாசகத்திலும்கண்ட ஒத்த கருத்துடைய பகுதிகள் சிலவற்றைத் தொகுக்கச்செய்து அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்புகளோடு ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித்தம்பிரான் சுவாமிகள் அவர்களின் திருவுளப்பாங்கின்படி இளவரசு ஸ்ரீமத்மகாலிங்கத்தம்பிரான் சுவாமிகளவர்கள் இதனை வெளியிட்டுள்ளார்கள்.

திருநாவுக்கரசர் திருவடிப்புகழ்மாலை:- சிவசேனுபதி ப தி சோ குமரசாமிச்செட்டியாரவர்கள் நினைவுமலர். சிவபூசா துரந்தாரும் சைவப்புரவலரும், சிவசேனுபதியும், சித்தாந்தக்காவலரும், திருக்குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத் தலைவருமான திரு, ப தி சோ குமரசாமிச்செட்டியா ரவர்களின் நினைவுக்குறியாக அவர்களது இளவர் திரு, சிங்காரம்செட்டியாரவர்களால் வெளியிடப் பெற்றது. அப்பாடிகள் வரலாற்று அகச்சான்றுப் பாடல்கள் இருபத்துமூன்றை முன்னர்க்கொண்டு சுந்தரமூர்த்தி சுவாமிகள் முதலாகப் பலரது பாடல்கள் இருநூற்று இருபத்துநான்கும், சிலாசாசனக்குறிப்பு முதலியவைகளும் தொடர்ந்து அமைய இதனைத் தொகுத்தவர் வித்துவான் சு. சுவர்ணகாளீச்சுரன் அவர்கள். சிவசேனுபதி அவர்களின் திருவுருப்படம் முகப்பிலமைந்து அணிசெய்கின்றது. இவ்விலவச வெளியீடு கும்பகோணம் செட்டிபுதுத்தெரு திரு, ப தி சோ சிங்காரம் செட்டியாரவர்களிடம் கிடைக்கும்.

சன்மார்க்க சங்கக் கூட்டம்

தேவகோட்டை, சன. 29- சன்மார்க்க சங்கத்தின் ஆத்திக வளர்ச்சிக் கூட்டம் திரு சண்முகநாதபிள்ளை தலைமையில் நடைபெற்றது. திருவேங்கடமுடையான்பள்ளித் தலைமையாசிரியர் திரு, எஸ். தெய்வசிகாமணி அனைவரையும் வரவேற்றார். திருவாளர்கள் ஆவி. ராம. மெய்யப்பசெட்டியார், சி. ஆறுமுகதேசிகர், சங்கரய்யர் ஆகியோர் பேசினார்கள். செயலாளர் திரு. எ ஜி ரெங்கசாமி அய்யங்கார் நன்றி கூறினார்.



உ
சிவமயம்
பாலருவாயர் துணை

'அகர உயிர்போல் அறிவாகி எங்கும்
நிகரில் இறை நிற்கும் நிறைந்து'

சந்தா:
உள்நாடு ரூ—3
வெளிநாடு ரூ–6

செட்டிநாடு

துன்முகி தை-25

தேர்தலும் தேறுதலும்

மத்திய அரசாங்கத்து மக்கள்சபைக்கும் மாநில அரசாங்கத்துச் சட்டசபைகளுக்கும் அணிமையில் தேர்தல் நிகழவிருக்கிறது. இப்பொழுது இந்தியாவை ஆளும் காங்கிரசுக்கட்சியின் சார்பில் தேர்தலுக்கு நிற்கப் பொறுக்கியிருக்கும் ஆட்களில் ஒரு சிலரைப்பற்றியும் பொறுக்காமல் விடப்பட்டிருக்கிற ஒருசிலரைப்பற்றியும் பொதுமக்கள் கொண்டுள்ள கருத்துக்களை காங்கிரசு மேலிடத்தார் ஒரு சிறிதாவது கவனித்துச் செய்வன செய்தார்களில்லை.

காந்திஜீயின் மாசற்ற கருத்துக்களை மனத்துட்கொண்டு, சேவை மனப்பான்மையுடனிருந்த காங்கிரசுக்காரர்களிற் பலர், அரசியலாணையும் பதவியும் வந்தபிறகு முன்னுக்குப்பின் முரணாக நடக்கத் தொடங்கினார்கள் அதனாலேயே அவர்களுக்குள் பொறாமையும் பூசலும் போட்டியும் உண்டாகவும் அவை அவர்களுக்கு மட்டுமன்றி அடுத்திருக்கின்ற மற்றையோர்களுக்கும் துன்பங் கொடுக்கவுமான நிலைமை ஏற்பட்டது.

ஏற்கனவே சிற்சில துறைகளில் பொதுமக்களில் பலரதும் உண்மைக் காங்கிரசுக்காரர்களில் சிலரதுமான வெறுப்பைப் பெற்றிருந்த

காங்கிரசு மேலிடம் இப்பொழுது தேர்தலுக்கு அபேட்சகர்களைப் பொறுக்கி யெடுத்ததிலும் அதுபற்றிப் பொதுமக்களது வேண்டுகோளைச் சிந்தித்து முடிவு செய்யாது பிடிவாதம் பிடிப்பதிலும் பரிபூரணமான வெறுப்புக்குரியதாக ஆனது பெரிதும் வருந்துதற்குரியதாகும்.

கருதியதை நிறைவேற்றும் ஆற்றலுடையவர்களைக் கட்சிக்குள் அகப்படுத்துவது அவர்களைக் கட்டிப்போடுது போன்றதாகும் என்பதைச் சென்ற தேர்தல் காலத்திலேயே நாம் வற்புறுத்திக் கூறியிருக்கிறோம். அறிவு மிகுதியைப் பற்றிச் சிறிதும் கருதாமல் ஆள் மிகுதியையே பெரிதும் கருதி நடைபெறுகின்ற மக்களாட்சியில் ஏதோ ஓரளவுக்காவது பொதுமக்களுக்குக்கிடைக்க இருக்கின்ற நன்மைகளுங்கூடக் கடைசிப் பூசல்களால் கிடைக்கமுடியாது போய்விடுமேன்பதைப் பதவிப் பித்துடையவர்கள் எப்படியும் நினைவு கொள்ளப் போவதில்லை.

இந்தநிலையில் தேர்தலைப்பற்றியோ அதனால் விளையக்கூடிய பயனைப்பற்றியோ பொதுமக்கள் சிந்தித்துக்கொண்டிருப்பதைவிட எது எப்படியானாலும் ஆகட்டும் என்று தேறுதல்கொண்டு அமைதி அடைவதுதான் பொருத்தமாயிருக்குமென்று இந்த வேளையில் குறிப்பிட விரும்புகிறோம்.

தீப்பெட்டிகள் உற்பத்தி

அகில இந்திய கதர்-கிராமக் கைத்தொழில்கள் போர்டின்கீழ் குடிசைத் தொழில் ரீதியில் ஏற்படுத்தப்பட்டுள்ள 37 தீக்குச்சித் தொழிற்சாலைகளும், நாள்ஒன்றுக்கு 45குரோஸ் தீப்பெட்டிகள் உற்பத்தி செய்யக்கூடியவை.

உங்களுக்குத் தெரியுமா?

மீன்துறையின் மூலம் நாட்டுக்கு வருடத்துக்குச் சுமார் 27 கோடி ரூபாய் வருமானமாகக் கிடைத்து வருகிறது. இத்துறையில் மொத்தம் சுமார் 75,000 நாட்டுப் படகுகள் ஈடுபடுத்தப் படுகின்றன. மொத்தம் சுமார் 7,50,000 மீனவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து வருகிறது.

செகண்டரி கல்வியின் விஸ்தரிப்புக்காக மத்திய சர்க்கார் 1955–56–ம் ஆண்டில் பல்வேறு ராஜ்யங்களுக்கு மொத்தம் 2,43,71,960 ரூபாய் நிதி உதவியாக வழங்கினர்.

காசியில் கூட்டுறவுத் தீப்பெட்டித் தொழிற்சாலையொன்றை அமைப்பதற்காக இந்திய சர்க்கார் 2,85,700 ரூபாய் வழங்கியுள்ளனர்.

நிலமில்லாத தொழிலாளர்களைக் குடியமர்த்துவதற்காக இரண்டாவது திட்ட காலத்துக்கு மொத்தம் 5.54 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதில் 5.05 கோடி ரூபாய் ராஜ்ய சர்க்கார்களும் 0.49 கோடி ரூபாய் மத்திய சர்க்காரும் செலவிடுவார்கள்.

1955–56ம் ஆண்டில், இந்தியாவில், மொத்தம் 19.94 கோடி ரூபாய் பெறுமானமுள்ள மின்சார யந்திர சாதனங்கள் இறக்குமதி செய்யப்பட்டன. 1954-55ம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்டவற்றின் மொத்தமதிப்பு 15.8 கோடி ரூபாய் ஆகும்.

இந்திய பாய்மரக் கப்பல்களின் மூலம் நடைபெற்றுவந்த சரக்குப் போக்குவரத்துகளின் மொத்த டன் நிறை 1953-54ல் 19,21,172ஆக இருந்தது 1954-55ம் ஆண்டில் 29,99,394 ஆக உயர்ந்துவிட்டது.

சைவாலயங்களில் சம்ஸ்கிருத அர்ச்சனையே வேண்டும்.

சித்தாந்தபண்டித பூஷணம் ஆ. ஈசுரமூர்த்திப்பிள்ளை

(முன்தொடர்ச்சி)

எப்போதோ எங்கோ யாராலோ திட்டமிடப்பட்ட அருள் நெறியும் ஏதோ வொன்றாகத்தா னிருக்கமுடியும். அதற்குப் பொருளுங் குறிக்கோளுஞ் சூனியந்தான். நேற்றுத் தோன்றி யது அருள்நெறித் திருக்கூட்டம். அருள்நெறியென்ற பெயருக் குப் பழமை கற்பிக்கப் புகுந்தார் நவீனர். யானு மறியேன் அவ ளும் பொய் சொல்லாள் என்ற பழமொழிக் கிலக்காயின அவர்ா சையும் முயற்சியும். அங்ஙனமாய தொரு வெற்றுரையே சுந்தரர் காலத்தைப் பற்றி அவர் கூறியதூஉ மென்க.

'சாதாரண மக்கள் தெய்வத் திருவுருவங்களோடு ஆன்மீகத் தொடர்பு கொள்வதற்காக அர்ச்சனைகள் ஏற்பட்டன' என அவர் கூறியது முன் காட்டப்பட்டது. சாதாரண மக்களாவர் யார்? பொதுமக்களா? பொதுமக்களென்பதற்குப் புலவர் ம. இராச மாணிக்கம்பிள்ளை கூறியபொருள் முன் காட்டப்பட்டது. வேறு பொருளுளதாயின் நவீனர் காட்டுக. அவ்வாக்கியங் கூறிய நவீ னர் சாதாரண மனிதரா? அசாதாரண மனிதரா? அர்ச்சனை சாதாரண மக்களுக்காக ஏற்பட்டதேயாமாயின் அசாதாரணமக் கள் பொருட்டு வேண்டாமா? அல்லது அர்ச்சனை யார் பொருட் டுச் செய்யப்பட்டாலும் அவர் சாதாரண மனித ராய்விடுவரா? அர்ச்சனை செய்யப் போனதன் விளைவு அதுதானென நவீனர் சொல்வாராயின் அவர் அர்ச்சனையையே அவமதிக்கிறா ரென் பது சித்தம். அர்ச்சனை சாதாரண மக்களுக்காக ஏற்பட்டதென் றாரே அவர். அவ்வேற்பாடு எப் புத்தகத்திற் காணப்படுகிறது? என்று நான் அவரை வினவுகிறேன்.

'வடமொழி தவிர வேறெம்மொழிகளிலும் தெய்வ வழிபாடு செய்யக்கூடாது என்ற கொள்கை எச்சாத்திரத்தில் காணப்படு

கிறது என்று வினவுகிறேம்' (25-5-55 தமிழ்நாடு) என்கிரு ரவர். அவர் ஒரு சைவரென நான் கொள்கிறேன். நானுஞ் சைவ சமயிதான். அச்சமயத்துக்குப் பாரம்பரியமான பிரமாண சாத்திரம் ஏதேனு மிருக்கவே வேண்டும். அது அவரையும் என்னையும் சேரப் பிணித்துச் சோதரராக்கிச் சைவாலயங்களிற் சேவை செய்ய உரிமைதரும். அவ்வாலயங்களிற் கிரியையாதிகளும் அந்தப் பிரமாண சாத்திரத்திற் கூறப்பட்ட விதியினுறே நடைபெறும். அச்சாத்திரம் எது? அதன் பெயரை அவர் சொல்க. அந்நாலில் அவர் வினுவுக்கு விடையிருக்கிறதாவெனப் பிறகு ஆராயலாம். ஆயினும் சம்ஸ்கிருத அர்ச்சனையே சைவ சாத்திரங்களின் அங்கீகாரம். அவ்வுண்மை பலபடியாலுங் காட்டப்பட்டது. அர்ச்சனை செய்க என்ற அபூர்வ விதியும், அதைச் சம்ஸ்கிருதத்திற் செய்க என்ற நியம விதியும் அதனுற் போந்தன பிறமொழி யர்ச்சனை எந்தச் சைவாலயத்திலும் எந்தக்காலத்திலும் நடந்ததில்லை. எந்தப் பிரமாண நூலிலும் அதற் கனுமதி கிடையாது. அதுவும் விளக்கப்பட்டது. பிறமொழிகளில் அர்ச்சனை செய்யற்க என்ற பரிசங்கியாவிதி அப்பிரஸ்தாப சூனியத்தாற் போதரும். அவர் வினுவுக்கு இவ்விடை போதாதா? இன்னென்னுஞ் சொல்கிறேன். 'நன்றென்பன சிலவே தீதென்பன சிலவே யொன்றினும் படாதன சிலவே' என்றது திருமுறை. நன்றென்பன விதி. தீதென்பன விலக்கு. விதியைச்செய்தால் சுகமும், விட்டால் துக்கமும், விலக்கைச்செய்தால் துக்கமும், விட்டால் சுகமும் வருவது நிச்சயம். ஆகலின் செய்வனவற்றையுந் தவிர்வனவற்மையுமே சாத்திரங் கூறும். ஒன்றினும் படாதனவும் பல. அவையெல்லாம் விருதா.

(தொடரும்)

திருத்தம்

மலர்26 இதழ்7 பக்கம்9 வரி9இலுள்ள 'சைவத்துறையிலும்' என்பதுமுதல் வரி11இலுள்ள 'அதுநல்லதா?' என்பது முடியவுள்ள பகுதியையும், வரி5இலுள்ள 'தென்கலையா' என்பதையும் நீக்கிவிடுக.

வழங்காத வள்ளல்

சு. இராசேந்திரன் [மயிலம் கல்லூரி மாணவன்]

கோவிந்தநகரம் – பெயரளவில் இது நகரமே தவிரக் கண் பார்வையளவில் ஒரு சிறிய கிராமம்தான். சிறிதாக இருந்தாலும் பார்ப்பதற்கு அழகாயிருக்கும். ஒரு ஊருணி, அதனை யடுத்து ஒரு பெரிய ஏரி. ஏரியின் இருமருங்கிலும் பசுமையான வயல் வெளிகள். மின்சாரம் ஒன்றுமட்டும் இங்கில்லை.

இவ்வூரிலிருக்கும் பத்துப் பெரியமனிதர்களில் ஒருவராகத் திகழ்பவர் வடிவேலுமுதலியார். வடிவேலுமுதலியாரைப்பற்றி எல்லோருக்கும் நன்ருகத் தெரியும். அதிலும் "வழங்காத வள்ளல் வடிவேலுமுதலியார்" என்று அன்று பிறந்த சிறுபிள்ளை கூடச் சொல்லத்தயங்காது. உண்மையிலே ஓரளவு சிக்கனமாக வாழ்பவர் வடிவேலுமுதலியார். ஊர்மக்களின் அவச்சொல்லினுல் ஒருபெரிய கஞ்சனுக மாறிவிட்டார். ஒரு ஆணும் பெண்ணும் களங்கமில்லாது சந்தித்துப் பேசுவதைக் கண்டு ஊரார் கூறும் கூற்றுக்களினுல்அவர்கள் தலைவன் தலைவியாகமாறுவதைப்போல் அமைந்து விட்டது முதலியாரின் கதை.

அன்று வெள்ளிக்கிழமை.உணவுஉண்டபின்,முற்றத்தில்உள்ள ஊஞ்சலில்வந்துஉட்கார்ந்தார்முதலியார். திண்டுக்கல் வெற்றிலை அவரது உதடுகளை அழகு செய்யத் தொடங்கியது. அன்றைய தினத்தாள் அவர்கண்ணில் பட்டது. உடனே அதில் பிரசுரித்துள்ள தேர்தல் அபேட்சகர் பட்டியலைப் படிக்கலானுர்.

என்னங்க! தையும் பிறந்துவிட்டது. இப்படியே பெண்ணை நம்மவீட்டிற்குள் வைத்திருந்தால் நாலுபேர் என்ன சொல்லுவாங்க. இது அவரது மனைவிசிவகாமி அம்மாளின் பேச்சு.

நாலுபேருக்காகவா? நாம் வாழ்வது. நமக்காக நாலுபேர் வாழணுமடி தெரிஞ்சுக்கோ என்ருர் அவர்.

அவரது கடைசிப்பெண் ராஜத்திற்கு இன்னுங் கல்யாணம் ஆகவில்லை. அரசாங்கத்தில் ஐந்தாண்டுத்திட்டம் போடுவது போல இவரும் ஐந்தாண்டுகளாகத் தன்மகளின் திருமணத்தைப் பற்றிச் சிந்தித்து வருகின்றார் சிறந்த முடிவைத்தான் காண முடியவில்லை.

மகளின் திருமணத்தைச் சிறப்பாக முடிக்கவேண்டுமென்று சிவகாமி அம்மாளின் விருப்பம். ஆனால் வழங்காத வள்ளல் சிக்கனமாக முடிக்கவேண்டுமென்று நினைப்பவர். நல்ல வேளையாக ரிஜிஸ்தர் ஆபிசில் பத்துரூபாய்க்குள் திருமணம் முடியுமென்பது அவருக்குத்தெரியாது. தெரிந்தால் சீர்திருத்தவாதியாக மாறிவிடுவார்.

திடீரென்று செய்தித்தாளை மூடிவிட்டு. வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல விர்ரென்று பக்கத்தூரிலுள்ள அச்சகம் ஒன்றுக்குச் சென்று, ஏதோ ஒரு விளம்பரத்திற்கு முன்பணம் செலுத்தி, இன்றிரவுதேவை என்று கூறிவிட்டு வீட்டிற்கு வந்தார்.

பைத்தியக்காரன்பின்னால் பத்துப்பேர், பணக்காரன்பின்னால் பத்துப்பேர் என்பதைப்போல இவர் பின்னால் பத்துப்பேர் சுற்ற ஆரம்பித்தனர். பத்துப்பேருக்கும் அன்றிரவு ஏதோ வேலையிருப்பதாகச் சொல்லித் தன்வீட்டிலேயே சாப்பாடு அளித்தார். ஊரடங்கும்நேரம். எல்லோரும் தூங்கிவிட்டனர். மூலைமுடுக்குகளிலெல்லாம் ஏதோ ஒரு விளம்பரத்தை ஒட்டத் தொடங்கினர்கள் வடிவேலு முதலியாரின் ஆட்கள்.

மறுநாள் காலை, சாலைகளில் கூட்டம் கூட்டமாக நின்று விளம்பரத்தைப் படிக்கத் தொடங்கினர்கள். 'வடிவேலு முதலியார் வரப்போகும் தேர்தலில் அபேட்சகராக நிற்கப் போகின்றார். உங்களது ஓட்டுக்களை அவருக்கே போடுங்கள்' என்பதுதான் அந்த விளம்பரம்.

வடிவேலு முதலியாருக்கு ஓட்டுப்போட்டு அனுப்பினல், சட்ட சபையில் சென்று சிக்கனவாழ்வுப் பிரசாரம் நடத்தத் தொடங்குவார். நம் கதி அதோகதிதான் என்று பலர் பலவிதமாகப் பேசிச் சென்றனர். சந்தாப் பணமில்லாத கஞ்சர்களின் சங்கத்திலிருந்து ஒரு அனுதாபக்கடிதம் முதலியாருக்கு அனுப்பெற்றது. ஆனல் முதலியார் மட்டும் மட்டற்ற மகிழ்ச்சியில் ஆழ்ந்திருந்தார்.

மகள் திருமணத்தை நல்ல முறையில் நடத்திவிடுவதென்று தீர்மானித்து ஏராளமான பணத்தைச் செலவு செய்யலானர் முதலியார். எல்லோருக்கும் விருந்து என்றும் விளம்பரம் செய்து விட்டார். ஊர் மக்களுக்கெல்லாம் ஒரே ஆச்சரியமாக இருந்தது. வழங்காத வள்ளல் வள்ளன்மை கண்டு பலர் வாழ்த்தினர். மகளின் திருமணத்தையும் சிறப்பாக நடத்திவிட்டார். ஊர்மக்கள் உத்தமர் என்று போற்றும் அளவிற்கு உயர்ந்து விட்டார்.

சில பெரிய மனிதர்கள் இவருடைய வீட்டிற்கு வந்தனர். வடிவேலு முதலியாரின் செய்கையில் ஏதோ தந்திரம்இருப்பதாகக் கருதினர். 'சிக்கன வாழ்வு அவசியந்தான். அச்சிக்கனத்தை முதலாக வைத்துப் பணம் சம்பாதிப்பதுதான் உயர்ந்த வாழ்வு. நான் தேர்தலில் நிற்கப் போவதாக விளம்பரம் செய்ததும், என்னை எதிர்த்து நிற்பவருக்குப் பயம் ஏற்பட்டுவிட்டது. ஒருநாள் என் வீட்டிற்கு வந்து 5000 ரூபாய் அடங்கிய செக் ஒன்றைக்கொடுத்துச் சென்றார் உடனே நான் வாபஸ் வாங்கிவிட்டேன். 500செலவழித்து 5000 சம்பாதித்து என் மகளின் திருமணத்தை நன்கு நடத்தினேன்' என்று கூறிச் சிரித்தார், வழங்காத வள்ளலின் சொற்களைக் கேட்டு வந்தவர்கள் ஆச்சரியத்தால மெய் மறந்து நின்று விட்டனர்.

பருத்தி உற்பத்தி

இந்தியாவில் பருத்தி உற்பத்திக்கான சராசரி ஏகர் விகித மாசூல் அளவு, 1952–53ல் 78 பவுண்டாகஇருந்தது 1953-54ல் 91 பவுண்டுக்கு உயர்ந்துவிட்டது.

தொடர் நாடகம்:

தியாகச்சுடர்

சித-சேதுராமன்

(முன்தொடர்ச்சி)

இதை மறைவிலிருந்து கேட்டுக்கொண்டிருந்த சரளா பேசுகிருள்: பாண்டியன் தேன்மொழியைக் காதலிக்கிருரா! நானென்ன இலவு காத்த கிளியாவதா! தேன்மொழி எனக்கு எதிரியா! சரியான தண்டனை அவளுக்கு. சே! சே! கூடாது. தேன்மொழியை இழந்தால் பாண்டியன் உயிருடன் இருக்கமாட்டார். ஹூம். இந்த எண்ணம் வேண்டாம். நான் அவருக்காகவே வாழவேண்டும். அவர் தேன்மொழியை மணந்து சுகமாக வாழட்டும்.

காட்சி-7

பாண்டியன் இல்லம். பாண்டியன் வரவிற்காகச் சரளா காத்துக்கொண்டிருக்கிருள். அப்போது பாண்டியன், 'வெளிநாடுகளிலே அரசியல் குழப்பங்கள்-உள்நாட்டிலோ வெள்ளம், புயல் என்ற இயற்கையின் இன்னல்- வீடிழந்து, நிலமிழந்து தவிக்கும் மக்களின் கூக்குரல்-கன்றிழந்த பசுவின் அலறல். தாயிழந்த சேயின் கதறல் - ஒய்யாரமாக ஆட்சிநடத்தும் துரைத்தனத்தார். நினைக்க நினைக்க விசித்திரமாயிருக்கிறது. நாட்டு நலனே தன் நலன் என்று கருதிய தமிழரசர்கள் ஆண்ட தமிழ்நாடு, இன்று ஏழைகளின் துயர்கண்டு கும்மாளம் போடும் கூட்டங்களுக்கு மத்தியில் சிக்கிக் கிடக்கிறது என்று பேசிக்கொண்டே உள்ளே வருகிருன்.

பாண்டியன்:- சரளா! வந்து நேரமாகிவிட்டதோ.

சரளா:- சற்று முன்தான் வந்தேன். தங்களைக் காணுவதற்குள் ரஷ்யா சென்று புல்கானினைப் பார்த்துவிடலாம்போலிருக்கிறதே.

பாண்:- என் இல்லம்நோக்கி வந்ததன் காரணம் யதோ?

சரளா:- தங்களைக்கண்டு ஒரு ரகசியம் சொல்லிச் செல்லலாமென்று வந்தேன்.

பாண்:- என்ன! ரகசியமா?

சராளா:- இன்று இரவு 12மணிக்குத் தேன்மொழி என் தந்தையின் ஆட்களால் அழகர் குகைக்குத் தூக்கிச் செல்லப்படப் போகிருள்.

பாண்:- ஆ! என் தேன்மொழியையா!

சராளா:- ஆம். நான் சென்று போலீசை அழைத்துவருகிறேன் நீங்கள் சென்று அவளைக் காப்பாற்றுங்கள்.

[பாண்டியன் கள்ளர்குகைக்குஓடுகிருன். அப்பொழுதுஅங்கு வந்த துரைசாமிபிள்ளை சாளாவிடம் எல்லா விபரமும் தெரிந்து அவளுடன் போலீஸ் ஸ்டேஷன் செல்லுகிருர்.]

காட்சி-8

[அழகர்குகை. மாணிக்கம்பிள்ளை குமார் முதலானேர் இருக்கின்றனர், தேன்மொழி கட்டுண்டு கிடக்கிருள்]

மாணி:- சபாஷ்; முத்தையா, சொன்னபடி கொண்டுவந்து விட்டாயே

முத்: தங்கள் உப்பை உண்டுவளர்த்த இவ்வுடல் தங்களுக்கு உதவிசெய்யாம லிருக்குமா?

[மாணிக்கம்பிள்ளை சில ரூபாய்நோட்டுக்களை அவன் கையில் திணிக்கிருர். முத்தையன் உள்ளப்பூரிப்புடன் வாங்கிக்கொள்ளுகிருன்.]

மாணி: முத்தையா! நீசென்று வேறு வேலையைக்கவனி (முத்தையன் போகிருன், மயக்கம்தெளிந்த தேன்மொழி தன்னைச் சுற்றிலும் பயங்காம் சூழ்ந்திருக்கிறது என்பதை அறியாமல் பேசுகிருள்]

தேன்: இப்பொழுது நான் எங்கேயிருக்கிறேன்.

குமார்: அவசியம் அறியவேண்டுமோ? என் அருகில் இருக்கிருய்.

(தொடரும்)

இராமநாதபுரம்

ஸ்ரீதாயுமானசுவாமி சன்மார்க்க சங்கத்தாரால் சுவாமிகளின் குருபூசைவிழா 24-1-57 முதல் 26-1.57 வரை சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது. 23-ந்தேதி மாலை ஸ்ரீசொக்கநாத சுவாமி கோயிலில் திருமுருக கிருபானந்தவாரியார் அவர்கள் 'ஸ்ரீதாயுமானவர்' என்னும் பொருள் பற்றிப் பேசினார்கள்

24-ந்தேதி ஸ்ரீதாயுமானசுவாமி சமாதிக்கோயிலில் முற்பகலில் பஜனை, கூட்டுப்பாராயணம், மகாபிஷேகம், தீபாராதனை, மகேசுவரபூசை அன்னதானம் முதலியன நடைபெற்றன. மாலையில் சொக்கநாதசுவாமிகோயிலில் செல்வி வயிநாகரம் இராம.மீனாட்சி 'சைவசித்தாந்தம்' என்பது பற்றியும், பாலகவி இராமநாதன் செட்டியார் 'தாயுமானாரும், சிவஞானசித்தியாரும்' என்பது பற்றியும் பேசினார்கள். 25. 26 ந்தேதி முற்பகல்களில் மடாலயத்தில் அபிஷேக ஆராதனை, அன்னதானங்களும், பிற்பகல்களில் சென்னை யோகாசன நிலையத்தார் நிகழ்ச்சிகள் இராசா உயர்நிலைப் பள்ளித் தமிழ் ஆசிரியர், வித்துவான் ஆறுமுகம்பிள்ளை அவர்கள் இயற்றிய 'தாயுமானார் வரலாறு' அரங்கேற்றம் முதலியன நிகழ்ந்தன.

குடியரசு தினம்

இலக்குமிபுரம் சொக்கலிங்க வித்தியாசாலையில் 26-1-57 காலை குடியரசு தினவிழா கொண்டாடப்பெற்றது. வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் திரு. ஜி. சுவாமிநாதய்யர் மூவர்ண தேசீயக்கொடியை ஏற்றுவித்தனர். கொடிவணக்கம் நடந்தபின் வித்தியாசாலைப் பிரார்த்தனை மண்டபத்தில் நடைபெற்ற கூட்டத்தில் குடியரசு சென்ற 7வருடங்களில் சாதித்துள்ள காரியங்களைப்பற்றி ஆசிரியர்களும் மாணவ மாணவிகளும் பேசினர். வித்தியாசாலை மாணவ மாணவிகளுக்கும் வந்திருந்தோர்க்கும் தின்பண்டம் நல்கப்பெற்று விழா இனிது நிறைவெய்தியது.

ஆசிரியர் பாலகவி இராமநாதன் செட்டியாரால் தேவகோட்டை
செட்டிநாடுஅச்சகத்தில் அச்சியற்றி வெளியிடப்பெற்றது.